Lakeridge Health

ஏப்பிரல் 17, 2020




அன்பார்ந்த டூறாம் பிரதேசத்து நண்பர்கள் மற்றும் அயலிடப் பெருமக்களுக்கு,

லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைக் குழுவினருக்கு இந்த கோவிட்-19 பெரும்புல நோய் (pandemic) நிலவி வரும் காலத்தில் நீங்கள் காட்டுகின்ற தளராத ஆதரவு, நட்பு மற்றும் ஈடுபாடு ஆகியவற்றுக்கு நாம் நன்றி கூறுகிறோம்.

டூறாம் பிரதேசம் அடங்கிலும் வாழும் மக்களின் ஆரோக்கியத்தை பராமரித்து ஆதார உதவி வழங்குகின்ற பணியில் ஈடுபட்டுள்ள எமது குழுவினர், ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் எமது பணியை தொடருவதற்காக இச்சமூக மக்கள் தமது தனிப்பட்ட செய்திகள், பரிவு கலந்த செயல்கள், உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்கி வருகின்றனர்.

கடந்த மார்ச்சு மாதம் 17ம் திகதி ஒன்ராறியோ அரசு ஓர் அவசரகால நிலைமையை பிரகடனம் செய்த நாள் தொடக்கம், நாங்கள் எல்லோருமே எமது சொந்த வாழ்விலும் சேவை வாழ்விலும் சடுதியான மாற்றங்களை செய்யும்படி வேண்டப்பட்டு இருக்கிறோம். உடல்ரீதியாகத் தூர நிற்றல், வீட்டிலேயே தங்கிவிடுவது போன்றவை இவற்றில் அடங்கும்.

இப்பெரும்புல நோயின் திசையை மாற்றுவதற்கு இவ்வகைத் தியாகங்கள் அவசியமானவை ஆகும். இவை நல்ல பலனையும் தருகின்றன! டூறாம் பிரதேசத்தில் இந்த வைரசுக் கிருமி பரவும் வேகம் இப்பொழுது குறைந்து உள்ளது என்பதற்கு அத்தாட்சிகள் உண்டு.

இந்த நல்ல செய்தியின்படி, நாம் எவற்றை இப்பொழுது செய்கிறோமோ அவற்றை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும். எங்களையும் எமக்குப் பிரியமானவர்களையும் எமது

சமூகம் முழுவதையும் பாதுகாப்பதற்காக, ஒரு சமூகமாக நாம் எல்லோரும் இந்த பிரமாண்டமான முயற்சியைத் தொடரவேண்டும்.

காய்ச்சல், இருமல், மூச்சு விடுவதில் சிரமம் அல்லது வேறு இவைபோன்ற அறிகுறிகள் உள்ளவர்கள் உடனடியாக ஒரு முதன்மை நிலைக் குடும்ப வைத்தியருடன் தொடர்பு கொள்ள வேண்டும். அல்லது அவர்கள் டூறாம் பிரதேச ஆரோக்கிய சேவைப் பிரிவினருடன் (Durham Region Health Department) தொடர்பு கொண்டு www.lakeridgehealth.on.ca என்ற இணையத் தளத்தில் உள்ள கோவிட்-19 நோயுக்கான பரிசீலனைப் படிவம் ஒன்றினை கணினி வழியாக நிரப்புதல் வேண்டும்.

மிகவும் நோய்வாய்ப்பட்டவர்களாக அவசர மருத்துவ சிகிச்சை அல்லது கவனம் தேவைப்படுவோர், அவசரகாலப் பிரிவுக்கு(emergency department)  போக வேண்டும். உங்களுக்கு பாதுகாப்பான, மிகச் சிறப்பான மருத்துவ பராமரிப்பினை வழங்குவதற்கு லேக்றிட்ஜ் ஆரோக்கிய வைத்தியசாலைகள் இங்கு தயாராக உள்ளன.

நீங்கள் உங்களுடைய பங்கினை செய்து கொண்டிருக்கும் அதே வேளையில், இந்த வைரஸ் கிருமியைக் கட்டுப்படுத்தி எல்லோரையும் பாதுகாப்பாக வைத்திருக்கும் முயற்சிகள் யாவற்றையும் லேக்றிட்ஜ் ஆரோக்கிய சேவைக் குழுவினர் தொடர்ந்து செய்து வருவர்.

**கோவிட்-19 நோயாளர்கள் நோயில் இருந்து மீண்டு வருகையில் அவர்களுக்கு ஆதாரஉதவி வழங்குதல்**

எமது நெருக்கடி நிலைப் பராமரிப்பு சிகிச்சைக் குழுவினர் மூச்சு உதவி இயந்திரங்களில் தங்கி இருந்து வந்த 10 நோயாளர்களிலும் அதிகமானவர்களுக்கு, வெற்றிகரமாக அவர்களுடைய சுவாச இணைப்புக் குழாய்களை அகற்றி  அவர்கள் தாமாகவே சுவாசிக்க வைத்துள்ளனர். நோயாளர்கள் தமது நுரையீரல் தொழிற்பாட்டினை மீளப் பெற்று, நோயில் இருந்து மீண்டு வருகின்றனர் என்பதை இது காட்டுகிறது. நோயாளர்கள், அவர்களது குடும்பத்தினர், எமது சிகிச்சைக் குழுவினர் ஆகிய எல்லோருக்கும் இது மகிழ்ச்சியூட்டும் செய்தியாக உள்ளது.

**சமூகத்திலும் நீண்ட நாள் பராமரிப்பு இல்லங்களிலும் கோவிட்-19 நோய் எதிர்ப்புப் போராட்டத்துக்கு உதவுதல்**

நீண்ட நாள் பராமரிப்பு இல்லங்களிலும் (LTC) ஓய்வுகால வாழ்வு இல்லங்களிலும் இந்த வைரஸ் கிருமியின் ஓட்டத்தை நிறுத்தி, எமது சமூகத்தில் பலவீனர்களாக உள்ள மக்களுக்கு பராமரிப்பு வழங்கும் முயற்சியில், லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பு தனது நிபுணத்துவம் மற்றும் மூலவளங்களைப் பயன்படுத்தி உதவி வருகிறது.

லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பு வேறு பல சமூகப் பங்காளர் நிறுவனங்களுடன் இணைந்து, LTC இல்லங்களுக்கும் ஓய்வுகால வாழ்வு இல்லங்களுக்கும் ஆதார உதவிளைப்

பல வழிகளில் வழங்கி வருகிறது. இவ்வகை இல்லங்களின் வதிவாளர்களையும் பணியாளர்களையும் பெரிய ஓர் அளவில் கிருமிக்காகச் சோதனை செய்தல், தொற்று பரவுதைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் நிபுணர்களின் உதவியினை வழங்குதல், மற்றும் கணினி வழியான தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அங்கு வாழ்வோருக்கான பராமரிப்பு மற்றும் மருத்துவ சேவைகளை வழங்குதல் ஆகியன இவற்றில் அடங்கும்.

இந்த வாரம் தொடக்கம், சாத்தியமான அல்லது உறுதி செய்யப்பட்ட கோவிட்-19 நோயாளர்களாகிப் பின்னர் சிகிச்சையில் இருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டோர் நோயிலிருந்து மீண்டு வரும் பொழுது, அவர்களின் மீட்சிக்கு உதவியாக நெருக்கடி நிலை ஆரோக்கிய பராமரிப்புச் சேவைகளை (critical health care services) பெறக் கூடியதாக இருக்கும். ஒவ்வொரு நோயாளியின் செல்லிடச் சாதனம்(mobile device) வழியாக வீட்டுப்பராமரிப்பு மருத்துவ தாதிகள் மற்றும் லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பு வைத்தியர்கள் குழு ஒன்று கண்காணித்து ஆதார உதவி வழங்க முடியும். நோயாளியின் சாதனத்தில் உள்ள ஒரு கணினிச் செயலி(app) உதவி கொண்டு இதனைச் செய்வதற்கு முடியும். இதற்கென்று ஒழுங்கு செய்யப்பட்டு இருக்கும் கணினிவழி மருத்துவ சிகிச்சை அறை *(Virtual Ward)* இதனை அனுமதிக்கிறது.

**உதவுவதற்கு இரண்டு முக்கிய வழிகள்**

உபகரணங்கள், சேவைகள் அல்லது சிகிச்சைக் குழுவின் சேமநலத்துக்கான பொருட்கள் ஆகியவற்றை நன்கொடையாக வழங்குவதற்கு COVID19GIVING@lh.ca என்ற இணையத் தளத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்களது நிதி ஆதார உதவியைக் கொடுப்பதற்கு, தயவு செய்து உங்கள் நன்கொடைகளை www.durhamfightscovid19.ca என்ற இணையத் தளத்தில் உள்ள *Durham Fights COVID-19* (*கோவிட்-19 நோயுடன் டூறாம் போராடுகிறது*) என்ற பிரச்சார நிதிக்கு வழங்குங்கள். நீங்கள் நன்கொடையினை உங்களது உள்ளூர் லேக்றிட்ஜ் ஆரோக்கிய அமைப்பு வைத்தியசாலைக்கு என்று அனுப்ப முடியும். உங்களது நிதி மூன்று முதன்மைத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும். அவை: நோயாளியின் அனுபவத்தை முன்னேற்றுகின்ற மூலவளங்கள், மருத்துவ சிகிச்சை உபகரணங்கள் மற்றும் வைத்தியசாலைச் சிகிச்சைக் குழுவினருக்கான பராமரிப்புப் பொருட்கள்.

உங்கள் பரிவுக்கும் தர்ம சிந்தனைக்கும் மீண்டும் ஒரு முறை நாம் நன்றி கூறுகிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக, எமது சமூகத்தையும் ஆரோக்கிய பராமரிப்புக் குழுக்களையும் பாதுகாப்பாக வைத்திருக்க உங்களால் முடிந்த அளவு செயலாற்றும் உங்கள் முழு முயற்சிக்கும் எமது நன்றி உரித்தாகட்டும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக அமையட்டும் என்று வாழ்த்துகிறோம்.

| | |
|---|---|
| சூசன் டிறிக் / Susan deRyk | கலாநிதி ரோனி ஸ்ரோன் / Dr. Tony Stone |
| இடைக்கால தலைவர் மற்றும் CEO | பணியாளர் குழுத் தலைவர் |
| Interim President and CEO | Chief of Staff |